வரும் மே 4 அன்று தமிழகம் மீண்டும் “உதயசூரியன்” ஒளியில் ஜொலிக்கும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை!

# தி.மு.க.வின் தொடர் வெற்றியை உறுதிப்படுத்தும் 20 பிரதான காரணிகள்!

## கள ஆய்வுகள் சொல்வது என்ன?

**தமிழக சட்டமன்றத் தேர்தல் களம் அதன் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகால தி.மு.க. ஆட்சியின் சாதனைகளும், பலமான கூட்டணி அமைப்பும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. கூட்டணியை மீண்டும் மகத்தான வெற்றியை நோக்கி இட்டுச் செல்கின்றன. களத்தில் நிலவும் சாதகமான 20 முக்கிய அம்சங்களின் விரிவான தொகுப்பு இதோ:**

**1. முதலமைச்சரின் தலைமைத்துவமும் மக்கள் செல்வாக்கும்!**

கடந்த 2021-இல் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஒரு திறமையான நிர்வாகியாகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளார். எவ்விதப் பாகுபாடுமின்றி அனைத்து மாவட்டங்களுக்கும் சீரான வளர்ச்சியை உறுதி செய்துள்ளார். குறிப்பாக, பேரிடர் காலங்களில் நேரடியாகக் களத்தில் இறங்கிப் பணியாற்றிய விதம் மக்கள் மத்தியில் அவருக்கு ஒரு ‘பாதுகாவலர்’ என்ற பெயரைத் தந்துள்ளது. அரசு இயந்திரத்தைச் சுணக்கமின்றி இயக்கியதுடன், கட்சித் தலைவராகவும் கூட்டணி கட்சிகளை அரவணைத்துச் செல்வதில் அவர் காட்டிய முதிர்ச்சி, இந்தத் தேர்தலில் அவருக்கு மிகப்பெரிய பலமாக உருவெடுத்துள்ளது.

**2. கலைஞர் மகளிர் உரிமைத் தொகை: வாழ்வாதார மாற்றம்!**

தமிழக வரலாற்றிலேயே பெண்களின் பொருளாதாரச் சுதந்திரத்திற்காகக் கொண்டு வரப்பட்ட மிகப்பெரிய திட்டம் இதுவாகும். ஒரு கோடிக்கும் அதிகமான தகுதியுள்ள பெண்களுக்கு மாதம் ரூ. 1,000 வழங்கப்படுவது, அவர்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பெரும் பங்கு வகிக்கிறது. தேர்தல் வாக்குறுதியாக இத்தொகையை ரூ. 2,000-ஆக உயர்த்துவதாக அறிவித்திருப்பது, குடும்பத் தலைவிகள் மத்தியில் தி.மு.க.வின் மீதான நம்பிக்கையை இருமடங்காக்கியுள்ளது. இது வெறும் நிதி உதவி மட்டுமல்ல, பெண்களின் உழைப்பிற்கு அரசு அளிக்கும் அங்கீகாரமாகவே வாக்காளர்கள் பார்க்கிறார்கள்.

**3. விடியல் பயணம்: இலவசப் பேருந்து வசதி**

அரசுப் பேருந்துகளில் பெண்களுக்கு இலவசப் பயணம் வழங்கும் திட்டம், சாதாரண உழைக்கும் பெண்களின் வாழ்வில் ஒளியேற்றியுள்ளது. தினசரி வேலைக்குச் செல்லும் பெண்கள், சிறு வியாபாரிகள் மற்றும் கல்லூரி மாணவிகள் இத்திட்டத்தின் மூலம் மாதம் ரூ. 800 முதல் ரூ. 1,500 வரை சேமிக்க முடிகிறது. இத்தொகை அவர்களின் குடும்பச் செலவுகளுக்குப் பெரிதும் உதவுகிறது. “ஏழைப் பெண்களின் பயணச் சுமையைத் துடைத்த அரசு” என்ற நற்பெயர், தி.மு.க.விற்குப் பெண்களின் வாக்குகளைத் தங்குதடையின்றி பெற்றுத் தரும் என்பதில் ஐயமில்லை.

**4. முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்!**

அரசுப் பள்ளி மாணவர்களுக்குக் காலை உணவு வழங்கும் திட்டம், ஒரு சமூகப் புரட்சியாகவே கருதப்படுகிறது. பசியின்றி மாணவர்கள் கல்வி கற்பதை உறுதி செய்துள்ள இத்திட்டத்தினால், அரசுப் பள்ளிகளில் மாணவர்களின் வருகைப் பதிவு கணிசமாக அதிகரித்துள்ளது. ஊட்டச்சத்துக் குறைபாட்டைப் போக்கி, ஆரோக்கியமான அடுத்த தலைமுறையை உருவாக்கும் இந்த முயற்சி, தாய்மார்கள் மத்தியில் தி.மு.க. அரசுக்கு நீடித்த இடத்தைப் பிடித்துத் தந்துள்ளது. சர்வதேச அமைப்புகளும், அண்டை மாநிலங்களும் வியந்து நோக்கும் இத்திட்டம், தேர்தல் களத்தில் தி.மு.க.வின் **“தங்கக் காரணியாக”** மாறியுள்ளது.

**5. புதுமைப் பெண் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டங்கள்!**

அரசுப் பள்ளிகளில் படித்து உயர்கல்விக்குச் செல்லும் மாணவிகளுக்கு மாதம் ரூ. 1,000 வழங்கும் ‘புதுமைப் பெண்’ திட்டம், பல்லாயிரக்கணக்கான ஏழை மாணவிகள் கல்லூரிப் படிப்பைத் தொடரக் காரணமாகியுள்ளது. இதன் தொடர்ச்சியாக, தற்போது மாணவர் களுக்கும் மாதம் ரூ. 1,000 வழங்கும் ‘தமிழ்ப் புதல்வன்’ திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. கல்விச் செலவுகளுக்காகப் பெற்றோர் படும் கஷ்டத்தைத் தீர்க்கும் இந்தத் திட்டங்கள், முதன் முறை வாக்காளர்கள் மற்றும் நடுத்தரக் குடும்பங்களின் வாக்குகளை தி.மு.க. பக்கம் முழுமையாக ஈர்த்துள்ளன.

**தமிழகத்தின் 2026 சட்டமன்றத் தேர்தல் முடிவுகள், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஐந்தாண்டுகால ஆட்சிக்கு மக்கள் வழங்கும் நற்சான்றிதழாக அமையப்போகின்றன. கட்டுக்கோப்பான கூட்டணி, மகளிரின் பேராதரவு மற்றும் சீரிய நிர்வாகம் ஆகிய முக்கூட்டுக் காரணிகள் தி.மு.க.வை மீண்டும் அரியணையில் அமர்த்தப் போவது உறுதி. வரும் மே 4 அன்று, தமிழகம் மீண்டும் ஒருமுறை ‘உதயசூரியன்’ ஒளியில் ஜொலிக்கும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.**

**ஆதாரங்கள் : லோக் போல் (Lok Poll), மாட்ரைஸ் (Matrize) மற்றும் நியூஸ் 9 (News9) வெளியிட்ட ஏப்ரல் 2026 தேர்தல் முன்கணிப்பு முடிவுகள் மற்றும் மாநில, தேசிய ஊடகங்களின பிரதான செய்தி மற்றும் கருத்துப் பதிவுகள்**

**6. சிதையாத மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி பலம்!**

தி.மு.க. தலைமையில் காங்கிரஸ், சி.பி.எம்., சி.பி.ஐ., வி.சி.க., ம.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் கடந்த ஏழு ஆண்டுகளாக ஒரே நேர்க்கோட்டில் பயணிப்பது மிகப்பெரிய அரசியல் வெற்றியாகும். தொகுதிப் பங்கீட்டில் சிறுசிறு வருத்தங்கள் இருந்தாலும், கொள்கை ரீதியாக இக்கூட்டணி வலுவாக உள்ளது. மேலும் தே.மு.தி.க. உள்ளிட்ட கட்சிகளும் இணைந்து இன்னும் வலுவடைந்துள்ளது. இது வாக்குகள் சிதறாமல் இருப்பதை உறுதி செய்துள்ளது. ஒவ்வொரு தொகுதியிலும் இந்த கூட்டணிக் கட்சிகளின் ஒருங்கிணைந்த களப்பணி, தேர்தல் முடிவுகளில் தி.மு.க. கூட்டணிக்கு 200 க்கும் மேற்பட்ட இடங்களை எளிதாகப் பெற்றுத் தரும் சூழலை உருவாக்கியுள்ளது.

**7. மேற்கு மண்டலத்தில் வீசும் ஆதரவு அலை!**

அ.தி.மு.க.வின் கோட்டையாகக் கருதப்பட்ட மேற்குத் தமிழகத்தில், இந்த முறை தி.மு.க. வின் செல்வாக்கு வரலாறு காணாத வகையில் உயர்ந்துள்ளது. கோவை மெட்ரோ ரயில் திட்டத்திற்கான வலுவான குரல், ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள், சிறு தொழில்களுக்கான மின் கட்டணச் சலுகை போன்றவை இப்பகுதி மக்களின் மன நிலையை மாற்றியுள்ளன. லோக் போல் போன்ற கருத்துக் கணிப்புகள் மேற்கு மண்டலத்தில் தி.மு.க. கூட்டணி அறுதிப் பெரும்பான்மை பெறும் எனக் கணிப்பது அ.தி.மு.க.விற்குப் பெரும் பின்னடைவாகும்.

**8. தொழில் வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்பு உருவாக்கம்!**

தமிழகத்தைத் தொழில் துறையில் இந்தியாவின் முதன்மை மாநிலமாக மாற்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மேற்கொண்ட வெளிநாட்டுப் பயணங்களும், உலக முதலீட்டாளர்கள் மாநாடுகளும் பலன் அளித்துள்ளன. சுமார் 10 லட்சம் கோடி ரூபாய் முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, லட்சக்கணக்கான வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, தெற்கு மாவட்டங்களில் தொடங்கப்பட்டுள்ள புதிய தொழிற்சாலைகள், அந்தப் பகுதி இளைஞர்களின் புலம் பெயர்தலைக் குறை த்துள்ளன. இது ‘வளர்ச்சி சார்ந்த அரசியலை’ முன்னெடுக்கும் தி.மு.க.விற்கு இளைஞர்களின் ஆதரவை உறுதிப்படுத்தியுள்ளது.

**9. மாநில சுயாட்சியும் “ஒன்றிய அரசு” நிலைப்பாடும்!**

ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஒருதலைப் பட்சமான போக்கிற்கு எதிராக, மாநில உரிமைகளுக்காகத் துணிச்சலாகக் குரல் கொடுக்கும் உறுதியான தலைவராக மு.க. ஸ்டாலின் பார்க்கப்படுகிறார். நிதிப் பகிர்வு, பேரிடர் நிவாரணம் மற்றும் மொழி உரிமை போன்ற விவகா ரங்களில் ‘ஒன்றிய அரசு’ க்கு எதிரான நிலைப்பாட்டில் உறுதியாக இருந்து அவர் போராடுவது, தமிழின உணர்வாளர்கள் மற்றும் நடுநிலை வாக்காளர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. தமிழகத்தின் நலனை தில்லியில் அடகு வைக்காத அரசு என்ற பிம்பம் திமுகவின் வெற்றிக்கு வலு சேர்க்கிறது.

**10. நீட் தேர்வுக்கு எதிரான சட்டப் போராட்டம்!**

தமிழக மாணவர்களின் மருத்துவக் கனவைச் சிதைக்கும் நீட் தேர்விற்கு எதிராக, தி.மு.க. அரசு முன்னெடுத்து வரும் சட்டப் போராட்டமும், மக்கள் இயக்கமும் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. ஆளுநரின் முட்டுக்கட்டைகளையும் மீறி, சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றியதுடன், மாணவர்களிடம் கையெழுத்து இயக்கம் நடத்தியது வரை திமுகவின் செயல்பாடுகள் கிராமப்புற ஏழை மாணவர்களின் நலன் காக்கும் அரணாகத் தெரிகிறது. இந்த விவகாரத்தில் அ.தி.மு.க. மற்றும் பா.ஜ.க.வின் மழுப்பலான போக்கு, அவர்களை மாணவர் சமூகத்திடமிருந்து அந்நியப்படுத்தியுள்ளது.

**11. மக்களைத் தேடி மருத்துவம்: ஒரு முன்னோடித் திட்டம்!**

மருத்துவமனைக்கு வர இயலாத முதியவர்கள் மற்றும் நோயாளிகளின் இல்லத்திற்கே சென்று மருந்துகளை வழங்கும் இத்திட்டம், கிராமப்புறங்களில் மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளது. ஒரு கோடிக்கும் அதிகமானோர் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர். சுகாதாரத் துறையில் தமிழகம் எட்டியுள்ள இந்த மைல்கல், சாதாரண மக்களின் உயிருக்கு உத்தரவாதம் அளிக்கும் அரசாக தி.மு.க.வை அடையாளப்படுத்தியுள்ளது. மக்களின் அடிப்படைத் தேவையான ஆரோக்கியத்தில் அரசு காட்டும் அக்கறை, தேர்தலின் போது வாக்குகளாக மாறும் என்பது திண்ணம்.

**12. சமூக நீதியும் 7.5% இடஒதுக்கீடு பயன்களும்!**

சமூக நீதிக் கொள்கையில் உறுதியாக இருக்கும் தி.மு.க. அரசு, அரசுப் பள்ளி மாணவர்களுக்குத் தொழிற்கல்விப் படிப்புகளில் வழங்கப்பட்டுள்ள 7.5% இடஒதுக்கீட்டை முழுமையாகச் செயல்படுத்தி வருகிறது. இம்மாணவர்களின் கல்விச் செலவு முழுவதையும் அரசே ஏற்பது, பல்லாயிரக்கணக்கான ஏழைக் குடும்பங்களின் வாழ்வில் ஒளியேற்றியுள்ளது. இது தவிர, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற திட்டம் உள்ளிட்ட சமூகச் சீர்திருத்த நடவடிக்கைகள், ஒடுக்கப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களின் நம்பிக்கையைப் பெற்றுத் தந்துள்ளன.

**13. எதிர்க்கட்சிகளின் பிளவு மற்றும் பலவீனம்!**

அ.தி.மு.க. தற்போது பா.ஜ.க.வின் அடிமையாக மாறியிருப்பது வாக்காளர்கள் மத்தியில் பளிச் சென பரவியுள்ளது. இது, தி.மு.க.விற்குச் சாதகமான ஒரு சூழலை ஏற்படுத்தியுள்ளது. எடப்பாடி பழனிசாமி யின் அதிகார வேட்கையால் அ.தி.மு.க. அடகு வைக்கப்பட்டுள்ளது என்ற செய்தி வலுவாக மக்களிடையே பரவியுள்ளது. இது அ.தி.மு.க.வின் வாக்கு வங்கியைப் பலவீனப்படுத்தியுள்ளது. பா.ம.க.வில் ஏற்பட்டுள்ள பிளவும், பா.ஜ.க. வுடனான அ.தி.மு.க.வின் கூட்ட ணியும், அதிமுக ஆட்சியா அல்லது என் டி ஏ ஆட்சியா என்ற பேச்சும் வாக்காளர்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளன. இந்த பலவீனமான கூட்டணியால், தி.மு.க.வின் பலமான கட்டமைப்பை எதிர்கொள்ள இயலவில்லை.

**14. “விஜய்” காரணியின் தாக்கம்**

நடிகர் விஜய் அவர்களின் தமிழக வெற்றிக் கழகம் முதல்முறையாகக் களமிறங்குவது, தேர்தல் களத்தில் ஒரு புதிய பரிமாணத்தைத் தந்துள்ள போதிலும், அது ஆளுங்கட்சியான தி.மு.க.விற்குப் பாதிப்பை ஏற்படுத்தாது என்றே ஆய்வுகள் கூறுகின்றன. விஜய்யின் வருகை பெரும்பாலும் அ.தி.மு.க. மற்றும் பா.ஜ.க.வின் வாக்குகளையும் நாம் தமிழர் கட்சியின் வாக்குகளையும் பிரிப்பதற்கே வழி வகுக்கும். மாற்று அரசியல் தேடும் இளைஞர்களின் வாக்குகள் டி.வி.கே.-விற்குச் செல்வது, மறைமுகமாக தி.மு.க. அணியின் வெற்றி வாய்ப்பை அதிகரிப்பதுடன், எதிர்க்கட்சிகளின் பலத்தைக் குறைக்கும் காரணியாகவே அமையும்.

**தி.மு.க. தலைமையில் காங்கிரஸ், சி.பி.எம்., சி.பி.ஐ., வி.சி.க., ம.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் கடந்த ஏழு ஆண்டுகளாக ஒரே நேர்க்கோட்டில் பயணிப்பது மிகப்பெரிய அரசியல் வெற்றியாகும். தொகுதிப் பங்கீட்டில் சிறுசிறு வருத்தங்கள் இருந்தாலும், கொள்கை ரீதியாக இக்கூட்டணி வலுவாக உள்ளது. மேலும் தே.மு.தி.க. உள்ளிட்ட கட்சிகளும் இணைந்து இன்னும் வலுவடைந்துள்ளது. இது வாக்குகள் சிதறாமல் இருப்பதை உறுதி செய்துள்ளது. ஒவ்வொரு தொகுதியிலும் இந்த கூட்டணிக் கட்சிகளின் ஒருங்கிணைந்த களப்பணி, தேர்தல் முடிவுகளில் தி.மு.க. கூட்டணிக்கு 200 க்கும் மேற்பட்ட இடங்களை எளிதாகப் பெற்றுத் தரும் சூழலை உருவாக்கியுள்ளது.**

**15. சிறுபான்மையினரின் முழுமையான ஆதரவு!**

பா.ஜ.க.வின் மதவாத அரசியலுக்கு எதிராக உறுதியாக நிற்கும் தி.மு.க. கூட்டணிக்கு, தமிழகத்திலுள்ள இஸ்லாமிய மற்றும் கிறித்தவ சிறுபான்மையினர் தங்களின் முழுமையான ஆதரவை வழங்குகின்றனர். அ.தி.மு.க. மீண்டும் பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைத்திருப்பது சிறுபான்மையினர் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இதனால், சுமார் 15% முதல் 18% வரையிலான இந்த வாக்கு வங்கி, ஒட்டுமொத்தமாக தி.மு.க. கூட்டணிக்கே விழும் சூழல் நிலவுகிறது. இது பல தொகுதிகளில் தி.மு.க.வின் வெற்றியை உறுதி செய்யும் தீர்மான கரமான சக்தியாக இருக்கும்.

**16. ஆன்மீகமும் கோயில் நிர்வாகச் சீர்திருத்தங்களும்!**

“தி.மு.க. ஆன்மீகத்திற்கு எதிரானது” என்ற எதிர்க்கட்சிகளின் பிரச்சாரத்தை முறியடிக்கும் வகையில், இந்து சமய அறநிலையத்துறை மூலம் பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள கோயில் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான கோயில்களுக்குக் குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளதுடன், கோயில் பணியாளர்களின் ஊதியம் உயர்த்தப்பட்டுள்ளது. ஆன்மீக உணர்வுகளை மதிக்கும் அதே வேளையில், கோயில் நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையைக் கொண்டு வந்தது நடுத்தர வர்க்க இந்து வாக்காளர்கள் மத்தியில் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

**17. விவசாயிகளுக்கான பிரத்யேக முன்னுரிமை!**

விவசாயத்திற்கு எனத் தனி பட்ஜெட் தாக்கல் செய்தது, 1.5 லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கியது மற்றும் நெல் கொள்முதல் விலையை ஒன்றிய அரசு நிர்ணயித்ததை விடக் கூடுதலாக வழங்கியது போன்றவை விவசாய சமூகத்தை நெகிழ வைத்துள்ளன. காவிரி நீர் விவகாரத்தில் மாநில உரிமைகளை விட்டுக்கொடுக்காமல் போராடுவது டெல்டா மாவட்டங்களில் தி.மு.க.வின் வெற்றியை உறுதி செய்துள்ளது. **“உழவர்களின் உற்ற நண்பன்”** என்ற பிம்பம் கிராமப்புற வாக்கு வங்கியை தி.மு.க. பக்கம் நிலை நிறுத்தி யுள்ளது.

**18. நவீன உட்கட்டமைப்பு மற்றும் நகர்ப்புற வளர்ச்சி**

தமிழகத்தின் அனைத்து முக்கிய நகரங்களிலும் புதிய மேம்பாலங்கள், கலைஞர் நூற்றாண்டு நூலகம் போன்ற அறிவுசார் மையங்கள் மற்றும் சீர்மிகு நகரத் திட்டங்கள் மூலம் உட்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டுள்ளது. சென்னை மற்றும் கோவையில் மேற்கொள்ளப்பட்டுள்ள மழைநீர் வடிகால் பணிகள் மற்றும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் நகர்ப்புற வாக்காளர்களைத் திருப்திப்படுத்தியுள்ளன. நவீன தமிழகத்தை உருவாக்கும் முயற்சியில் தி.மு.க. அரசு வெற்றி கண்டுள்ளது.

**19. தகவல் தொழில்நுட்பம் மற்றும் பரப்புரை பலம்**

தி.மு.க.வின் ஐடி விங் மற்றும் பரப்புரைக் குழுவினர் அரசின் சாதனைகளை மிகத் துல்லியமாகச் சமூக ஊடகங்கள் மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்துள்ளனர். எதிர்க்கட்சிகளின் பொய்ப் பிரச்சா ரங்களை உடனுக்குடன் புள்ளிவிவ ரங்களுடன் முறியடிப்பது தி.மு.க. விற்குப் பெரும் பலமாகும். ஒவ்வொரு வாக்காளரின் கைபேசியிலும் அரசின் சாதனைகளைச் சென்றடையச் செய்திருப்பது, தேர்தல் களத்தில் ஒரு வலிமையான பிம்பத்தை உருவாக்கியுள்ளது.

**20. கருத்துக் கணிப்புகள் காட்டும் வெற்றிச் சித்திரம்!**

தேர்தலுக்கு முன்னதாக வெளிவந்துள்ள லோக் போல் போன்ற முன்னணி கருத்துக் கணிப்புகள் அனைத்தும் தி.மு.க. கூட்டணிக்கு 180 இடங்களுக்கு மேல் கிடைக்கும் என ஒருமனதாகத் தெரிவிக்கின்றன. தி.மு.க. தனது சொந்த பலத்திலேயே ஆட்சி அமைக்கத் தேவையான இடங்களைப் பெறும் என்பதும், அ.தி.மு.க. மற்றும் பிற கட்சிகள் மிகப்பெரிய பின்னடைவைச் சந்திக்கும் என்பதும் உறுதியாகியுள்ளது. இந்தச் சாதகமான சூழல் தொண்டர்கள் மத்தியில் பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது, இது வாக்குப்பதிவு நாளில் எதிரொலிக்கும்.

நன்றி :
**‘தீக்கதிர்’**
19.04.2026



எங்கள் பகைவரும், பாசிஸத்தின் உறவுகளும் எங்கோ மறைந்தனர், இங்குள்ள தமிழர்
ஒன்றாதல் கண்டே ! காலத்தை வீண் செய்யோம், கடமை ஆற்றுவோம், வென்று முடிப்போம்!

